**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
**------**

**அசல் வழக்கு எண்.**194/2019

**2026 ஆம்** வருடம் ஆகஸ்ட் மாதம் 05 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.1–இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாகரத்தினம் | ஜாதி | : | |
| த.பெ | : | முத்தழகுபிள்ளை | தொழில் | : | விவசயாம் |
| கிராமம் | : | அக்கரைப்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 81/2026 |
| தேதி | : | 05.08.2026 | | | |

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் ராஜேந்திரன் நிலத்தை ஒப்படைக்க வேண்டும் என்றும், அவருக்கு குத்தகைக்கு நிலத்தை விடவில்லை என்றும் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். யார் யார் மீது வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் ராஜேந்திரன், அவரின் தம்பி தெய்வம், ராஜாமணி, மாவட்ட ஆட்சியர் திண்டுக்கல், வட்டாச்சியர் ஆத்தூர், நடராஜான், ராஜா, அரவிந்தகுமார் ஆகியோர் மீது தாக்கல் செய்துள்ளோம். தாவா சொத்து உங்களுக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் என் மாமனாருக்கு பாத்தியமான சொத்து. என் மனைவிக்கும், மைத்துனருக்கும் பாத்தியமான சொத்து, அதனால் எனக்கும் பாத்தியம். உங்கள் மனைவி உயிருடன் உள்ளாரா என்றால் இறந்துவிட்டார். எந்த வருடம் இறந்தார் என்றால் சரியாக நியாபகமில்லை, 2003 என்று நினைக்கிறேன்.

உங்களுயைட வாரிசுகளை இந்த வழக்கில் சேர்த்துள்ளீர்களா என்றால் சேர்த்துள்ளேன். வழக்கு சொத்து உங்கள் மாமனாரின் சொத்து

என்பதால் நீங்கள் நேரடியான வாரிசாக வரமாட்டீர்கள் என்றும், எனவே நீங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்து, இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க முடியாது என்றால் சரியல்ல.

வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதற்காக குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக இந்த வழக்கு வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Typed to my direction in
open court ready over by
me and acknowledged
by him/her to be correct.

DM-Cum-JM,
Athoor